# முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்

## உறுதி மொழி

தமிழையும், தமிழ் மண்ணையும் நேசிக்கும் நான்,

எனது கிராமத்தை தூய்மை கிராமமாகவும், நமது தமிழ்நாட்டை தூய்மை தமிழகமாகவும் மாற்றிட நான் என்றென்றும் முயற்சி செய்வேன்.

திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் நோய்கள், வருமான இழப்பு, மருத்துவச் செலவு, குழந்தைகளின் வளர்ச்சி பாதிப்பு, ஆகியவற்றை அனைத்து தரப்பினரிடமும் எடுத்துக் கூறுவேன்.

வீட்டுக்கு வீடு கழிப்பறை, மற்றும் கழிப்பறை பயன்பாட்டினை, அனைவரிடமும் வலியுறுத்திக் கூறுவேன்.

மனித மலம் கண்களுக்கு புலப்படும் வகையில் இருப்பதை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும், நகம் வெட்டும் பழக்கம், சோப்பினால் கைகழுவும் பழக்கத்தினை கற்பிப்பதுடன் நானும் மேற்கொள்வேன்.

பெண்களின் கௌரவத்தை காப்பதற்கும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களின் நலன் காத்திடவும் கழிப்பறை அவசியம் என்பதை வலியுறுத்துவேன்.

எனது கிராமம், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமமாக மாற்றிட, அனைத்து முயற்சிகளையும் செய்வேன்.

முழு சுகாதார தமிழகம், முன்னோடி தமிழகமாக மாற்றிட சீரிய முயற்சியில் நான் முழுமையாக என்னை அர்ப்பணிப்பேன் என உளமாற உறுதி கூறுகிறேன்.